**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW- 7 |
| Name | : | சையது அலிபாத்திமா |
| Father Name | : | முகமது உஸ்மா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 05.09.2024***

***1ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி வருகை. 3ம் எதிரி வருகை இல்லை. குவிமுச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**நீதிமன்ற விசாரணை**

நான் 10ம்வகுப்பு முடித்துவிட்டு வீட்டில் இருக்கிறேன். தற்போது எனக்கு 16 வயதாகிறது. நான் 05.08.2009-ம் ஆண்டு பிறந்தேன். நான் இப்போது நீதிமன்றத்தில் சாட்சியாக வந்துள்ளேன். சாட்சி கேள்விகளை புரிந்துகொண்டு பதில் சொல்கிறார் என்பதால் அவரை அரசு தரப்பில் விசாரிக்க அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் தற்போது கண்டியூரில் வசித்து வருகிறேன். நான் முன்பு நடுக்கடையில் பாத்திமா நகரில் வசித்து வந்தேன். எனது அண்ணன் பெயர் மன்சூர் அலி தம்பி பெயர் ஜாபர் அலி ஆகும். எனது அண்ணன் 10 வகுப்பு வரை படித்துள்ளார். அதற்கு மேல் படிக்கவில்லை. எனது தம்பி தற்போது 9ம் வகுப்பு படிக்கிறார். நான் கண்டியூர் அரசு மேல்நிலைபள்ளியில் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன குணா என்பவரை எனக்கு தெரியும். குணாவின் அம்மா பெயர் வெண்ணிலா. அவர் எனது அப்பாவின் அக்கா. சம்பவம் நடந்தபோது எனக்கு சிறுவயது என்பதால் குணா என்பவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனது அத்தை வெண்ணிலாவுக்கு 2 பையன்கள் மற்றும் ஒரு பெண்பிள்ளை. குணா இறந்தபோது நான் 5 அல்லது 6ம் வகுப்பு படித்து வந்தேன். குணா இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இன்று நீதிமன்றத்திற்கு எனது அப்பா மற்றும் அண்ணனுடன் வந்துள்ளேன். இந்த வழக்கில் இன்று

நீதிமன்றத்தில் ஆஜராக சொல்லி எனக்கு சம்மன் வந்தது. எனது அத்தையின் வீடு பள்ளியகிரகாரம் காந்தி நகரில் உள்ளது. அத்தை வீட்டுக்கு பக்கத்து வீடு யாருடையது என்று எனக்கு தெரியாது. நான் அத்தை வீட்டுக்கு எப்பயாவது போவேன்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது அத்தை மகள் பெயர் மோனிஷா. 28.5.2020ம் தேதி மதியம் 2.30மணியளவில் எனது அத்தை வீட்டில் நானும் எனது அத்தை, மோனிஷ, முருகவேல் ஆகியோர் இருந்ததாவும் அப்போது மணிகண்டன் என்பவர் கையில் கடப்பாரையுடன் மணிகண்டனின் அத்தை மகன் கார்த்தி ஆகியோர் கையில் அரிவாளுடன் மற்றும் ஆயுதங்களுடன், அரசகுமார் என்கிற அசோக் இரும்பு பைப்புடன் அத்தை வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து டி.வி, முகம்பார்க்கும் கண்ணாடி மற்றும் மற்ற பொருள்களை உடைத்ததாகவும் அத்தையை ஆபாசமாக பேசியதாகவும் பிறகு உனது மகன் குணா, மருமகன் புகழேந்தி எங்கே என்று கேட்டு ஆபாசமாக பேசியதாகவும் பின்பு 20 நிமிடம் எதிரிகள் எனது அத்தை வீட்டை சுற்றி வந்தார்கள் என்றும் அப்போது வந்த இறந்துபோன குணாவை எதிரிகள் துரத்திக்கொண்டுபோய் வின்சென்ட் வீட்டு கழிவறை அருகே வைத்து தாங்கள் கொண்டுவந்த ஆயுதங்களால் தாக்கினார்கள் என்றும் இரத்தம் கொட்டி கீழே விழுந்த கார்த்திக்கை பார்த்து எதிரிகள் தாயோளி செத்துட்டான்டா வாங்க போவோம் என்றும் பின்பு இறந்துபோன குணாவை வின்சென்ட் வீட்டு கூரை தாழ்வாரத்தில் கொண்டுவந்து வைத்தார்கள் என்றும் பின்பு 28.5.2020 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா எதிரிகளோடு சமாதானம் செய்து கொண்டு அவர்களை காப்பாற்றுவதற்காக என்னையும் பொய்சாட்சியம் சொல்லுமாறு சொன்னதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.